சுருக்கம்

பாசனம் – நீர்வள ஆதாரத் துறை – 2009–2010 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டம் – விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், பூட்டை அணைக்கட்டினை புனரமைக்கும் திட்டத்தினை ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி – நிர்வாக ஒப்புதல் ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (ட்டி1) துறை

அரசாணை (நிலை) எண். 142 நாள் 4.8.2009.

ஆடி 19
திருவள்ளுவர் ஆண்டு 2040

படிக்க:–

தலைமைப் பொறியாளர்(திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, கடித எண்.F/9000/2008, நாள். 20.1.2009.

-----

ஆணை:

நீர்வள ஆதாரத் துறை, திட்ட உருவாக்க தலைமைப் பொறியாளர் அவர்கள் பார்வையில் படிக்கப்பட்ட அவருடைய கடிதத்தில், விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், அரசம்பட்டு கிராமத்தில் மணி நதியின் குறுக்கே பூட்டை அணைக்கட்டு 1902ம் ஆண்டு கட்டப்பட்டது என்றும், மணி நதியின் குறுக்கே அமைந்துள்ள முதல் அணை இதுவாகும் என்றும், இந்த அணைக்கட்டின் வாய்க்கால் மூலமாக பூட்டை ஏரியும் அதனுடைய உபரி நீர் செம்பரம்பட்டு ஏரி, பொய்குன்னம் ஏரி, நெடுமனூர் ஏரி, சோழம்பட்டு ஏரி ஆகிய ஐந்து ஏரிகளுக்கு நீர் வழங்கி, இறுதியாக முக்தா நதியில் கலக்கிறது என்றும் தெரிவித்துள்ளார். 2005ம் ஆண்டு வெள்ளத்தினால் பூட்டை அணைக்கட்டு மற்றும் அதனுடைய தொடர்ச்சியான ஏரிகளும் மோசமாக பழுதடைந்துள்ளதாலும், இந்த ஏரிகள் பொருளாதாரத்தின் பின்தங்கிய பகுதியில் உள்ளதாலும் தற்போது கீழ்காணும் பணிகளை மேற்கொள்ளவேண்டியது அவசியம் என்றும் கூறியுள்ளார்:-

1. முகப்புச்சுவர், தடுப்புச் சுவர், ஏப்ரான் ஆகியகைகளை மறு கட்டமைப்புச் செய்தல்.
2. செம்பரம்பட்டு, பொய்குன்னம் மற்றும் நெடுமனூர் ஏரிகளின் கரைகளை மேம்படுத்துதல்.
3. செம்பரம்பட்டு மற்றும் நெடுமனூர் ஏரிகளின் மதகுகளை மேம்படுத்துதல்
4. பொய்குன்னம் ஏரியின் வழிந்தோடியினை மேம்படுத்துதல்.

2009–2010ம் ஆண்டு விலைவிகிதப்படி இத்திட்டப்பணிகளுக்கு மதிப்பீடு ரூ.44.00 இலட்சங்கள் ஆகும் எனவும், இத்திட்டப்பணிகள் நீர்வள ஆதாரத் துறை, சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் அவர்களால் செய்து முடிக்கப்படும் என்பதால், இத்திட்டத்தினை செயல்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவைப்படாது எனவும் தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) மேலும் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட பணியினை 2009–2010–ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கு நிலை நிதிக் குழு (Standing Finance Committee) ஒப்புதல் அளித்துள்ளது. இதனடிப்படையில், 2009–2010–ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், பூட்டை அணைக்கட்டினை புனரமைக்கும் பணியை ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் (2009–2010ம் ஆண்டு விலைவிகிதப்படி) மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது. இத்திட்டம் தொடர்பாக, சில்லறை செலவினங்கள், சிறு மேற்பார்வை செலவுகள் மற்றும் எதிர்பாரா செலவுகள் ஆகிய அனைத்து இனத்தின் கீழ் ஏற்படும் மொத்த செலவுகள், மொத்த பணி செலவுத் தொகையில் (Work Estimate) 2.5%க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்கிற நிபந்தனையுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

3. மேலே பத்தி 2ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

"4702 – 00 சிறு பாசனம் குறித்த மூலதனச் செலவு–101 மேற்பரப்பு நீர்–பதினொன்றாம் ஐந்தாண்டு திட்ட பணிகள்–II மாநில திட்டம்–JA. சிறுபாசன சிறப்புத் திட்டம்–16 பெறும் பணிகள் "
(த.தொ.கு. 4702–00–101–JA –1607)".

4. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை மண்டலம் அவர்கள் மேற்கண்ட திட்டப் பணியினை உடனடியாக மேற்கொண்டு, அனுமதிக்கப்பட்ட தொகைக்குள், குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கவும், திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை அரசுக்கு ஒவ்வொரு மாதமும் அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.குறிப்பு எண்.33748/பொ.ப. II/2009 நாள். 19.6.2009ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.இராமசுந்தரம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைத் தலைமைப்பொறியாளர் நீர்வள ஆதாரத்துறை மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது),
சேப்பாக்கம், சென்னை.5
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை மண்டலம், சென்னை 5.
தலைமைப்பொறியாளர்(திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத்துறை, சேப்பாக்கம், சென்னை.5
மாவட்ட கருவூல அலுவலர், வேலூர்
மாநில கணக்காயர், சென்னை.18/35
நகல்
நிதி (பொ.ப.II/வ.செ.பொ.IIதுறை, சென்னை.9
பொ.ப.(சி.பா.1) துறை, சென்னை 9 (5 நகல்கள்).
இ.கோ /உதிரி

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்